தமிழகத்தை கண்டுகொள்ளாத பா.ஜ.க.வை மக்கள் நிராகரிக்க தயாராகிவிட்டார்கள்: முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு

வடசென்னை வளர்ச்சி திட்டத்துக்கான இலச்சினையை வெளியிட்டார்

சென்னை, மார்ச் 15–

தமிழ்நாட்டை கண்டுகொள்ளாத பாரதீய ஜனதாவை மக்கள் நிராகரிக்க தயாராகிவிட்டார்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

வடசென்னை வளர்ச்சி திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், 11 துறைகளை உள்ளடக்கி ரூ.4,181 கோடியே 3 லட்சம் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகள் தொடங்கப்பட இருக்கிறது. இதில், முதற்கட்டமாக 87 திட்டங்கள் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி சென்னை தங்கசாலையில் நேற்று மாலை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு 87 திட்டப்பணிகளை தொடங்கி வைத்ததுடன், வடசென்னை வளர்ச்சித்திட்டத்துக்கான இலச்சினையையும் வெளியிட்டார். முன்னதாக, வடசென்னை வளர்ச்சி திட்டப் பணிகள் தொடர்பான புகைப்பட கண்காட்சியையும் அவர் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:–

''வடசென்னை வளர்ச்சி திட்டம்'' முடிவுறுகிறபோது, வடசென்னையின் வரலாற்றில், ஒரு புதிய சாகப்தத்தை தி.மு.க. எழுதியிருக்கும். கடந்த 10 ஆண்டு கால அண்ணா தி.மு.க. ஆட்சியில் சென்னை எப்படி வெள்ளத்தில் மூழ்கியது? சென்னை மட்டுமா, ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் நிதிநிலைமையும் மூழ்கடித்துவிட்டு சென்றார்கள். அவர்களைப் போன்று தான் 10 ஆண்டு கால பாரதீய ஜனதா ஆட்சியும் சென்னைக்கு எதுவும் செய்யவில்லை. தமிழ்நாட்டிற்கும் ஒன்றும் செய்யவில்லை.

ஆனால், நாளைக்கு (அதாவது இன்று) பிரதமர் மோடி, கன்னியாகுமரி வரப்போகிறார். எதற்காக வரப்போகிறார்? தமிழ்நாட்டிற்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்கித் தர வரப்போகிறாரா? இல்லை, ஓட்டு கேட்டு வரப்போகிறார். ஓட்டு கேட்டு வருவதை நான் தவறு என்று சொல்ல விரும்பவில்லை.

சென்னை வெள்ளத்தில் மிதந்தபோது, மக்களுக்கு ஆறுதல் கூற வராத பிரதமர், தூத்துக்குடியும், கன்னியாகுமரியும் வெள்ளத்தில் மிதந்தபோது மக்களைப் பார்க்க வராத பிரதமர், ஓட்டு கேட்டு மட்டும் வருவது நியாயமாக இருக்கிறதா?

குஜராத் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, அன்றைய தினமே ஹெலிகாப்டரில் சென்று பார்த்தாரே. மறுநாளே, நிவாரண நிதி கொடுத்தாரே. குஜராத்திற்கு ஏன் கொடுத்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் தரவில்லை என்று தான் கேட்கிறேன்.

குஜராத்துக்கு அன்றைய தினமே நிதி தருவதும், தமிழ்நாட்டிற்கு 3 மாதம் சென்ற பிறகும் நிதி தர மனதில்லாமல் போவதும் ஏன்? இதை கேட்டால், நம்மை பிரிவினைவாதி என்று அடையாளம் காட்டுகிறார்கள். நம்மை பிரிவினைவாதி போல் பேசுகிறார்கள்.

நாம் கேட்டுக் கொண்டே இருப்பது என்ன? மத்திய அரசுக்கு அதிக வரி வருவாய் எங்கிருந்து போகிறது? நம்முடைய தமிழ்நாட்டில் இருந்து போகிறது. நம்முடைய பணம் தான் போகிறது. ஆனால், அதற்கேற்ற மாதிரி திருப்பி தருகிறார்களா? நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், 28 பைசா தான் மறுபடியும் நமக்கு வருகிறது. அதையாவது ஒழுங்காக கொடுக்கிறார்களா? இல்லை.

பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை. ஒரு கண்ணில் வெண்ணெய்யும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் ஏன் என்று தான் கேட்கிறோம். தேசபக்தியை பற்றி எங்களுக்கு யாரும் போதிக்க வேண்டியது அவசியம் இல்லை.

இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுத்த நாங்கள், உலகின் தலைசிறந்த கூட்டாட்சி நாடாக, மக்களாட்சி நாடாக இந்தியா வளர்ந்து, வளம் பெற வேண்டும் என்பதற்காகத் தான் உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

மக்கள் கேட்கிறார்கள்

தமிழ்நாட்டிற்கு எந்த நன்மையும் செய்யாத உங்களுக்கு, தமிழ்நாட்டு மக்களின் ஓட்டு மட்டும் வேண்டும். இது என்ன நியாயம்? ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் கேட்கிறார்கள்? 10 ஆண்டுகளில் என்ன சிறப்புத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். பதில் கூறுங்கள் பிரதமரே என்று மக்கள் கேட்கிறார்கள், நாங்கள் கேட்கவில்லை. மக்கள் கேட்கிறார்கள்.

தமிழ்நாட்டை சீரழித்த அண்ணா தி.மு.க.வையும், தமிழ்நாட்டை கண்டுகொள்ளாத மத்திய பாரதீய ஜனதாவையும் மக்கள் நிராகரிக்க தயாராகிவிட்டார்கள். அதுதான் இந்த காட்சி, இந்த சாட்சி. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடும் திராவிட மாடல் அரசும், உங்களுக்காக எந்நாளும் உழைக்க இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் இருக்கிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியின் தொடர்ச்சியாக, இந்தியாவையும் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்நாட்டு மக்களான நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அதற்கு துணை நிற்க, அழைக்கிறேன். தமிழ்நாட்டை வளர்ப்போம், இந்தியாவை காப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ்பொய்யாமொழி, சி.வி.கணேசன், சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, எம்.பி.க்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், எம்.எல்.ஏ.க்கள் ஆர்.டி.சேகர், தாயகம் கவி, இ.பரந்தாமன், ஜான் எபிநேசர், அ.வெற்றியழகன், ஜட்ரீம் மூர்த்தி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார்,

சென்னை மாநகராட்சி கமிஷனர் ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் காகர்லா உஷா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் தா.கார்த்திகேயன், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அடையாறு ஆறு சீரமைப்பு திட்டத்திற்கு ரூ.4,778 கோடி நிர்வாக அனுமதி: முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, மார்ச் 15–

அடையாறு ஆறு சீரமைப்பு திட்டத்திற்கு ரூ.4 ஆயிரத்து 778 கோடி நிர்வாக அனுமதி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரசு நேற்றிரவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

பெருநகரில் உள்ள ஆறுகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த தமிழ்நாடு அரசினால் ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டம், அடையாறு நதி சீரமைப்பு ஆகிய திட்டங்கள் சென்னை நதிகள் சீரமைப்பு அக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகளை பருத்திப்பட்டு அணையில் இருந்து முகத்துவாரம் வரையிலான 32 கிலோ மீட்டர் தூரம் மேற்கொள்ள ரூ.735.08 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், கரையோர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை ரூ.545.22 கோடி சார்பு துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் கிளை கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் கிளை கால்வாய்கள் சீரமைப்பு திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு ரூ.1,281.88 கோடி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இதில் எல்லை கணக்கெடுப்பு, மறுகுடியமர்வு தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அடையாறு முகத்துவார சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்திற்கு ரூ.24.93 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அடையாறு நதி சீரமைப்பு திட்டத்திற்கு ரூ.555.46 கோடி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், மறு குடியமர்வு மற்றும் நல்வாழ்வுக்கான பணிகள், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் போன்ற பணிகள் நடந்து வருகிறது. சீரமைப்பு பணிகள் தொடர்புடைய சார்பு துறைகளால் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சீரமைப்பு பணிகள் இந்த மாதம் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சார்பு துறைகளுக்கு ரூ.372 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. சிறப்பு நோக்கு நிறுவனம் மூலம் அடையாறு நதியை சீரமைக்கும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் அரசு தனியார் பங்களிப்புடன் ரூ.1,500 கோடி செலவில் பூங்காக்கள், பசுமை நடைபாதைகள், உடற்பயிற்சி கூடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அடையாறு, கூவம், நீர்நிலைகளை சுத்தப்படுத்தி மறுசீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளின் முதல் கட்டமாக 44 கி.மீ அடையாறு ஆற்றில் கலப்பதை தடுத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

கூடுவாஞ்சேரி தொடங்கி, தாம்பரம், திருநீர்மலை பகுதி வழியாக பாய்ந்து வரும் அடையாறு நதியை மீட்டெடுத்து, இரு கரைகளிலும் 70 கிலோ மீட்டருக்கு கழிவுநீர் குழாய்கள் அமைத்து கழிவுநீரை தடுத்து, குழாய்கள் மூலமாக 14 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படும்.

தற்போது, இந்த திட்டத்திற்காக முதலமைச்சர் ஸ்டாலின் சென்னை ஆற்றுப்படுகையில் முதற்கட்டமாக அடையாறு ஆற்றை மீட்டுருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த இந்த திட்டத்திற்காக ரூ.4,778.26 கோடி நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை வழங்கி பணிகளை தொடங்கிட உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

784 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்: செங்கல்பட்டு, காஞ்சிபுரம் வீரர் – வீராங்கனைகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

காஞ்சிபுரம், மார்ச். 15–

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கி செங்கல்பட்டில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய விளையாட்டு வளாகத்திற்கான அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 359 கிராம ஊராட்சிகளுக்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 274 கிராம ஊராட்சிகளுக்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 784 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பை வழங்கினார்.

அரசு நலத்திட்ட உதவிகளாக 5 நபர்களுக்கு ரூ. 13.80 லட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டா, 5 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தலா ரூ. 13,500 மதிப்பில் ஸ்மார்ட் போன், செங்கல்பட்டு மாவட்ட அளவில் சிறுதானிய மற்றும் பாரம்பரிய உணவு போட்டியில் வெற்றிபெற்ற 8 சுயஉதவிக் குழுக்களுக்கு பரிசுத் தொகை, மாவட்ட அளவில் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகளவில் கடனுதவி வழங்கிய சிறந்த வங்கிகளுக்குப் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையில், நீச்சல் வீரர் தனுஷ் சர்வதேச அளவிலான நீச்சல் போட்டிகளில் 5 முறை இந்தியாவிற்காக பங்கேற்று பல்வேறு பதக்கங்களை வென்றது, நேபாளில் 2019–ம் ஆண்டு நடைபெற்ற 13வது தெற்காசிய விளையாட்டில் இரண்டு வெள்ளி பதக்கங்கள், உஸ்பெகிஸ்தான் நாட்டில் நடைபெற்ற 9வது ஆசிய சாம்பியன்ஷிப்பில் ஒரு வெள்ளி பதக்கம் வென்றது குறித்து பேசி பாராட்டினார்.

இதேபோல காஞ்சிபுரம் வீல்சேர் பென்சிங் வீராங்கனை தங்கை சங்கீதா, ஒடிசாவில் நடந்த நேஷனல் வீல்சேர் பென்சிங் சாம்பியன்ஷிப்பில் வெண்கல பதக்கம் வென்றதையும் சங்கீதாவுக்கு 3 சதவீத விளையாட்டு இட ஒதுக்கீட்டின் மூலம் வணிக வரித் துறையில் இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டார்.

வெற்றி என்பது சுலபமாக கிடைக்காது. நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக தூரம் தாண்ட முடியும் என்று டாக்டர் கலைஞர் அடிக்கடி சொல்வார். எனவே, விளையாட்டுத் துறை மட்டுமல்ல நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள அத்தனை துறைகளிலும், எந்த துறையாக இருந்தாலும் அந்த துறையில் நீங்கள் வெல்ல வேண்டும் என்றால் இன்று இளைய தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து அமைச்சர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, ஐ.கருணாநிதி, எம்.வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி, செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண்ராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே.மேகநாதரெட்டி, தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி, துணை மேயர் காமராஜ், சார் ஆட்சியர் நாராயண சர்மா, கூடுதல் ஆட்சியர் அனாமிகா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் படைவீரர்களுக்கும் வீட்டுவரிச் சலுகை திட்டம் விரிவாக்கம்: அரசாணை வெளியீடு

சென்னை, மார்ச் 15–

முன்னாள் படைவீரர்களுக்கும் வீட்டுவரிச் சலுகை திட்டத்தை விரிவாக்கம் செய்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டசபையில் 19.2.2024 அன்று நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் பட்ஜெட் உரையில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில், வீட்டுவரித் தொகையை மீளப்பெறும் சலுகை தற்போது போர் விதவைகள், குடும்ப ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்களின் விதவைகள், பராமரிப்பு மானியம் பெறும் போரில் ஊனமுற்ற படைவீரர்கள், வீரவிருதுகள் பெற்ற முன்னாள் படைவீரர்கள் போன்ற சில பிரிவினருக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

வரும் நிதியாண்டில் இருந்து குடியிருப்புகள், சொத்துவரி, வீட்டுவரித் தொகையை மீளப்பெறும் இந்ததிட்டத்தை அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் நீட்டிப்பு செய்து ஆணையிடப்படுகிறது. இதனால் 1.20 லட்சம் முன்னாள் படைவீரர்கள் பயனடைவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி தமிழகத்தில் 1.25 லட்சம் முன்னாள் படைவீரர்கள் உள்ளனர். 31.8.2023 தேதிப்படி 16 ஆயிரத்து 806 முன்னாள் படைவீரர்கள் ரூ.2.29 கோடி வீட்டுவரி செலுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், நிபந்தனைகளுக்கு உட்பட்ட தகுதியுடைய முன்னாள் படைவீரர்களுக்கு இந்த திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று அரசுக்கு முன்னாள் படைவீரர் நல இயக்குனர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

அந்த நிபந்தனைகளின்படி, அந்த முன்னாள் படைவீரர் தமிழ்நாட்டில் நிரந்தரமாக குடியிருக்க வேண்டும். அவரது சொந்த வீட்டிற்கு, அவரது சொந்த பயன்பாட்டில் உள்ள குடியிருப்பாக பயன்படுத்தப்படும் கட்டிடத்திற்கு மட்டும் சலுகை வழங்கப்படும்.

வருமான வரி செலுத்துபவராக இருக்கக்கூடாது. ராணுவப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, மறுவேலை வாய்ப்பு முறையில், தமிழக அரசுத் துறைகள், மத்திய அரசுப் பணிகள், மத்திய மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுபவராக மற்றும் ஓய்வூதியம் பெறுபவராக இருக்கக்கூடாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சிறுபான்மை மொழி மாணவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. கட்டாய தமிழ் மொழி பாடத்தேர்வு எழுதுவதில் விலக்கு

சென்னை, மார்ச் 15–

தமிழ்மொழி சிறுபான்மை பேரவையினர், மொழி சிறுபான்மையினர் பள்ளிகளில் தமிழ்மொழி பாட ஆசிரியர்கள் நிரப்பப்படாததால், இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. கட்டாய தமிழ் பாடத்துக்கு பதிலாக தங்களுடைய தாய் மொழியில் தேர்வு எழுத அனுமதிக்குமாறு கேட்டிருந்தனர். மேலும் தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டால், தமிழ் மொழி பாடத் தேர்வில் இருந்து விலக்கு கோரி முறையீடு செய்யப்படமாட்டாது என உறுதி அளித்தும் இருந்தனர்.

தமிழ் மொழி சிறுபான்மை பேரவையினரின் கோரிக்கை, உறுதிமொழியை ஏற்று, நடைபெற உள்ள எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வில் தமிழ் மொழி அல்லாத சிறுபான்மை மொழியினை தாய் மொழியாக கொண்ட மாணவர்களுக்கு மட்டும் கட்டாய தமிழ் மொழி பாடம் எழுதுவதில் இருந்து விலக்கு அளித்து, சிறுபான்மை தாய்மொழி பாடத்தினை தேர்வாக எழுத அனுமதி வழங்கி பள்ளிக் கல்வித்துறை அரசாணை வெளியிட்டு இருக்கிறது.

மேலும் 2024–25ம் கல்வியாண்டில் சிறுபான்மை மொழி பள்ளிகளில் உள்ள அனைத்து தமிழ் ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்பிட பள்ளிக்கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குனர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PUBLIC NOTICE
Titan Company Limited
Registered Office: 3, Sipcot Industrial Complex, Hosur, Tamil Nadu 635126

NOTICE is hereby given that the certificates for the under mentioned securities of the Company have been lost / mislaid and the holder of the said securities has applied to the Company to release the new certificates. The Company has informed the holder / applicant that the said shares have been transferred to IEPF as per IEPF rules. Any person who has a claim in respect of the said securities should lodge such claim with the Company at its Registered Office within 15 days from this date, else the Company will proceed to release the new certificate to the holder / applicant, without further intimation.

Name of Holder	Kind of Securities and Face Value	Folio No.	No. of Securities	Distinctive No(s) From – To
Sunita Devi	Equity and Face Value Rs. 1/-	TWS 0008761	1000 1000	3502721 to 3503720 3503721 to 3504720

Name: SUNITA DEVI

Place: TAMILNADU **Date:15-3-2024**

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம் மெப்ஸ், இறப்பு சான்று

தனலஷ்மி,
கவிதா பண்ணை,
நெ.8, சிவசண்முகம் தெரு,
செங்கல்பட்டு மாவட்டம்,
பல்லாவரம் வட்டம்,
ஜமீன் பல்லாவரம் கிராமம்.

– மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் கணவர் **கிருஷ்ணன்** என்பவர் 21.10.2017 தேதியன்று மேற்கண்ட விலாசத்தில் உடல் நலக்குறைவால் இறந்தார் என்றும், அவரது இறப்பை பதிவு செய்யாமல் விடுபட்டதால், அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் தாம்பரம் மெப்ஸ் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபணையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலர்
தாம்பரம்

SBFC எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : யூனிட் எண்.103, முதல் தளம், C&B ஸ்கொயர், சங்கம் காம்ப்ளக்ஸ், சிடிஎஸ் எண். 95ஏ, 127 அந்தேரி குர்லா சாலை, கிராமம் சகாலா, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 059 | Telephone: +912267875300
Fax: +91 2267875334 | www.SBFC.com | Corporate Identity Number: U67190MH2008PTC178270

பொது அறிவிப்பு

26.03.2024 அன்று காலை 10:30 மணிக்கு எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் ஏலம் கீழே குறிப்பிட்டுள்ள கிளை முகவரியில் நடத்தப்படும் என்பதை பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள், தங்கள் நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறிய எங்களது பல்வேறு வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளைச் சேர்ந்தவை. இந்த கடன் வாங்கியவர்களுக்கு எங்கள் ஏல அறிவிப்புகள் முறையாக வழங்கப்பட்டுள்ளன. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள் கிளையின் பெயருடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் காலாவதியான கடன் கணக்குகளுக்கு சொந்தமானது.

கிருஷ்ணகிரி கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், கதவு எண். Mig-82, **நியூ ஹவுசிங் பிளாக் 1, கட்டிகானப்பள்ளி, கிருஷ்ணகிரி** 535 002, **லேண்ட் மார்க் : ஆரியபவன் ஓட்டல் எதிரில்,** AP00565248,AP00566537,AP00575458,AP00584728

மடிப்பாக்கம் கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், எண்.எஸ்பிஎப்சி,மனை எண்.1 & 2, **முதல் தளம், மேடவாக்கம் பிரதான சாலை, மடிப்பாக்கம் கூட்டு ரோடு, மடிப்பாக்கம், சென்னை** 600 091, AP00183074, AP00200942,AP00323491,AP00351653,AP00530339,AP00605322

புதுச்சேரி கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், எம் பத்மினி வளாகம், ஏர்செல் கட்டிடம், சர்வே எண். 6, பழைய எண். 12, 100 **அடி ரோடு, எல்லைப் பிள்ளைச் சாவடி, எச்டிஎப்சி வங்கிக்கு அடுத்தது, இசிஆர் சாலை, பாண்டிச்சேரி, இந்தியா –**605008, AP00208424, AP00278430, AP00468484

சேலம் கிளை முகவரி : எஸ்பிஎப்சி பைனான்ஸ் லிமிடெட், 171/2, **1வது தளம், சூரமங்கலம் மெயின் ரோடு, திருவாகவுண்டனூர், சேலம், தமிழ்நாடு** 636005, AP00583978,AP00584356,AP00594276

மேலும் விவரங்களுக்கு, எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடர்பு எண்(கள்) 18001028012**ல் தொடர்பு கொள்ளலாம்: (ஏலத்தில் விடப்பட வேண்டிய கணக்குகளின் எண்ணிக்கையை மாற்றவும், எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ஒத்திவைக்கவும் / ரத்து செய்யவும் எஸ்பிஎப்சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு உரிமை உள்ளது.)**

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: 3வது தளம், பஞ்ச்ஷில் டெக் பார்க், விமான நகர், புனே 411014, மகாராஷ்டிரா.
கிளை அலுவலகம்: பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட், எண் 143வது மாடி சாய் ராஜ்ய ஆபீசர்ஸ் லேன், வூரீஷ் கல்லூரிக்கு எதிரில், வேலூர் 632001
அங்கீகரிக்கப்பட்ட அலுவலக விவரங்கள்: வரதராஜ் M, மின்னஞ்சல் முகவரி : varadaraj.m@bajajfinserv.in, மொபைல் எண். 9940155459/8669189048

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் ('சட்டம்') அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏலத்திற்கான பொது அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உடன் கடன்தாரர் பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்('BFL')க்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டம் 2002 மற்றும் அங்குள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கூறிய அசையா சொத்து ('பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்து') கையகப்படுத்தப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி BFLக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை, பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை பெறுவதற்காக பாதுகாக்கப்பட்ட சொத்து பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும். கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி எண் 8 மற்றும் 9ன் கீழ் (இனிமேல் விதிகள் என குறிப்பிடப்படுகிறது) பாதுகாக்கப்பட்ட சொத்து விற்பனை மற்றும் **'எங்கே இருக்கிறதோ அதுபோல்', 'எதுவாக இருந்தாலும்', 'எப்படி இருந்தாலும்' மற்றும் 'ஆதாரம் இல்லாத' அடிப்படையில்''** 19/04/2024 அன்று ஏலம் நடைபெறும். மற்றும் அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

கடன் கணக்கு விவரங்கள்/ கடன்தாரர்/கள் & உத்தரவாத தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம்	1 ரிசர்வ் விலை 2 சொத்துக்கான EMD 3 ஏல அதிகரிப்பு
(LAN No. 403SHL24683182 and 403SHL24683885) 1. நந்தகுமார் வி (கடன்தாரர்) ஏஎச்106, எஸ்2, சுக் சாகர், 1வது சீவார்டு சாலை, சென்னை 600041 மேலும்: பிளாட் எண். பி–5, பழைய எண் 28, புதிய எண் 51, ஆதாமோதராபுரம் பிரதான சாலை, அடையாறு, சென்னை–600020 மொத்த நிலுவைத் தொகை : 04.03.2024 அன்று மொத்த நிலுவைத் தொகை: ரூ.32,58,075/- (ரூபாய் முப்பத்திரெண்டு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எழுபத்தைந்து மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி. மற்